# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்)

**ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மயந்த திஸாநாயக்க அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **54 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : 10.00**

## ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு" என்றழைக்கப்படும் நிலையமொன்றை அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்துடன் தொடர்புபட்ட எல்லா குறிக்கோள்களையும் அத்துடன் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிலையமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

**1**. இச்சட்டம் 2015 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதற்குப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பு என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைத்தல்.

வழக்குத் தொடுக்கலாமென்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயனபடுத்தவும் அது விரும்பியவாறு அந்த இலச்சினையை மாற்றவும் அதிகாரம் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

*3*. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாயிருக்க வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(1) கீழ் குறிப்பிட்டுள்ள பொது நோக்கங்கள் மன்றத்தின் பொது நோக்கங்களாகின்றன. இம் மன்றத்தின் நோக்கு பொது நோக்கங்கள், பொது கொள்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை இலங்கைக்குள் வாழ்கின்ற மக்களுக்கு புரியவைத்தல், சுயசக்தி மற்றும் ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதுடன், பிக்குமார் மற்றும் பொதுமக்களின் பங்கெடுப்பின் மூலமாக அவற்றை நடைமுறைப் படுத்துதல் :-

(i) இலங்கைக்குள் செயற்படுகின்ற பல்வேறு நிறுவனங்களுக்கும் கம்பனிகளுக்கும் தேவைப்படுகின்ற வழிகாட்டுதல் மற்றும் இணைப்பாக்கத்தை பெற்றுத் தருதல்.

(ii) கீழ் காணப்படும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை மதிப்பிடுதல் சம்பந்தமாக தேவைப்படும் தலைமைத்துவத்தை வழங்குதல்.

(அ) சுற்றாடல் ;
(ஆ) நீர் ;
(இ) வீடுகள் ;
(ஈ) சுகாதாரம் ;
(உ) கல்வி ;
(ஊ) கலாசாரம் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சித் திட்டங்கள்.

(iii) இலங்கைக்குள் செயல்படும் நிறுவனங்களை ஒருங்கிணைக்கின்ற நிறுவனமாக செயற்படுதல்.

(2) (i) கௌதம புத்தரின் தர்ம ஒழுக்கத்தை நன்றாகப் புரிந்து அவ்வழி காட்டலின் பிரகாரம் புத்த சாசனத்தை ஒளிபெறச் செய்தல் ;

(ii) அனைத்துப் பிக்குமார்களின் நல்லொழுக்கம் மற்றும் பிக்குமார் அமைப்புக்களின் யாப்பு விதிகள் மற்றும் கலந்துரையாடல்களை அவ்வாறே ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துதல் ;

(iii) பிக்குமார் அமைப்புகளில் துறவறம் பூண்டுள்ள அங்கத்தவர்களின் அனைத்து விகாரைகள் மற்றும் தானம் வழங்கும் கிராமங்களை இலக்காகக் கொண்டு சந்தர்ப்பத்துக்கேற்றவாறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(iv) ஆசிரியர், மாணவ உறவுகள் உறுதிப்படுத்துதல் விதத்திலும் ஏனையோருடன் நட்புறவு வளர்க்கும் வகையிலும் ஒன்று கூடி தகுந்த திட்டங்களை செயற்படுத்துதல் ;

(v) விகாரையொன்றில் எவ்விதமான நெருக்கடி ஏதும் ஏற்படும்போது அத்தகைய நெருக்கடி பற்றி நன்றாக ஆராய்ந்து காலத்துக்கேற்ப நடவடிக்கை எடுப்பதில் தலையிடுதல் ;

(vi) அனைத்து சந்தர்ப்பங்களிலும் துறவறத்தின் முதுமைக்கேற்ப அனைத்து சமய, சமூகப் பணிகளின் போது செயற்படுதலும் துறவறப் பதவியில் மூத்த பிக்குமார்களின் வழிகாட்டுதல்அறிவுரைகள் மற்றும் சம்பிரதாயங்களை ஏற்று பின்பற்றுதல் ;

(vii) காலத்தின் தேவைகளுக்கேற்ப தர்ம ஒழுக்கம் சம்பந்தமாக அறிவுறுத்தல் மொழி இலக்கியம் மற்றும் எழுத்துக்கலை பற்றிய பயிற்சிக்கான ஆர்வத்தை ஏற்படுத்துதலும் அத்துடன் சம்பந்தப்பட்ட திறமைகளை வளர்ப்பதற்கு செயற்படுதலும் ;

(viii) இலங்கையிலுள்ள சகல விகாரைகளையும் சம்பந்தப்படுத்தி சமய, நலன்புரி அமைப்புக்களை நிருவகிப்பதனூடாக மக்களுடைய குணதர்மங்களை அபிவிருத்தி செய்வதுடன் மரபு ரீதியான சம்பிரதாயங்களை பேணக்கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல் ;

(ix) கல்வி அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துதல் ;

(x) சுற்றாடலைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(xi) இல்லற வாசிகளுக்கும் துறவிகளுக்கும் இடையில் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்ப அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(xii) எளிமையான வாழ்க்கை முறையின் நோக்கங்களை படிப்படியாக ஈடேற்றிக்கொள்ளல் ;

(xiii) மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படும் வழிகள் நல்ல, தூய்மையானதாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள் ளல்.

(xiv) சமூக, நல்லொழுக்க, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பரிபூரணமான அஹிம்சைப் போராட்டமொன்றை கிராமத்திலும் நகரத்திலும் ஏற்படுத்துவதில் மன்றத்தினால் மேற்கொள்ளப் பட்ட முதற்கட்டம் சிரமதானமென்பதை புரிந்து நீதி மற்றும் சமத்துவம் போன்றவை அடிப்படை அம்சங்களாக கொண்டுள்ள எத்தகைய துன்புறுத் தல்களுமற்ற சமூகமொன்றை உருவாக்குவதற்காக காலத்திற்கேற்ப எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றி கவனத்துடன் சேவையாற்றல் ;

(xv) புத்தசாசனத்தின் எதிர்கால நிலைப்பாட்டிற்காக, மிகவும் பயனுள்ளவர்களான சீடர் பிக்குமார்கள் மற்றும் இளம் பிக்குமார்கள் சாசனத்திற்காக உன்னதமான வளங்களாக மதித்தல், பாதுகாத்தல் மற்றும் தேவைப்படும் முறையான அறிவுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் ;

(xvi) ஏதேனும் விகாரையொன்றின் பிக்கு ஒருவர் இறப்பின் பொறுப்புடன் செயற்பட்டு, அக்கிரிகை கள் முடியும் வரை அர்ப்பணிப்புடன் செயற்படுதல்;

(xvii) வேண்டுகோள் இருக்கும் பட்சத்தில் சாசன ரீதியான வைபவங்களுக்கு ஆகக் கூடிய பங்களிப்பினை வழங்குதல், விகாரைகளின் அபிவிருத்தி பணிகள், சமய விழாக்கள், பாராட்டு விழாக்கள் அல்லது அனைத்து அங்கத்தவர்களும் அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்படுதல் ;

(xviii) காலத்திற்கேற்ப முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க் காணும் கலாசார பொருளாதார சமூக கருத்திட்டங்களை பிரேரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

(1) கிராம வீதிகளை செப்பனிடுதல்.
(2) சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்.
(3) வீடமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
(4) சுற்றாடல் சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களை செயற்படுத்தல்.
(5) பிரிவெனாக்களில் கல்விகற்கின்ற மாணவ பிக்குமார்களுக்கு கல்விசார் உபகரணங்களையும் மொழி ஆற்றலையும் பெற்றுத் தருவதற்கு முயற்சித்தல்.
(6) தொழிற்பயிற்சித் திட்டங்களை செயற்படுத்தல்.
(7) நலன்புரி வேலைத்திட்டங்களை மேம்படுத்தல்.
(8) கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கான கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

அங்கத்தவர்களும் அவர்களது கடமைகளும்.

**4**. அங்கத்துவ சபை :-

(1) தலைவர், உபதலைவர்
(2) செயலாளர், பிரதிச்செயலாளர், உதவிச் செயலாளர்
(3) பொருளாளர்
(4) கணக்குப் பரிசோதகர்
(5) குழு
(6) ஆலோசனைச்சபை
(7) உபகுழு அங்கத்துவம்.

*1. தலைவர் -*

(1) எந்நேரத்திலும் தலைமை தாங்குதல்.

(2) சபையில் தலைமை தாங்குவதுடன் மற்றும் அனைத்து விடயங்களையும் தயார்படுத்துதல்.

(3) இவ்வமைப்புக்காக முழுமையான ஒத்துழைப்பை வழங்கி செயல்படுதல்.

(4) சபையின் உடன்பாட்டிற்கிணங்க இறுதி முடிவை எடுக்கும் கடமைப்பாடு தலைவருக்கே உண்டு. வங்கிக் கணக்குகள் மற்றும் பணம் பெற்றுக்கொள்ளும்போது தலைவருடைய கையெழுத்து முக்கியமாகும்.

*2. உபதலைவர் -*

தலைவர் இல்லாத நேரங்களில் இவரே தலைவரின் சகல கடமைகளையும் புரிய வேண்டும் என்பதுடன் தலைவருக்கு எந்நேரத்திலும் எவ்விதத்திலும் ஒத்துழைப்பவராக இவர் திகழ்வார்.

*3. செயலாளர் -*

ஒவ்வொரு சபையிலும் தயார்படுத்திய அறிக்கையினை சபைக்கு முன்வைப்பதும் வருடாந்த அறிக்கையினை தயார் படுத்துதல் தகுந்த நாளில் சபையைக் கூட்டுதல் மற்றும் சபையில் கடிதங்கள் ஆகியவற்றை தயார்படுத்துவது மட்டும் அல்லாமல் அதில் கையொப்பம் இடுவது இக்கடிதங்கள் அனைத்துக்கும் பதில் அனுப்பும் பொறுப்பும் இவருக்கு உண்டு. வங்கிக் கணக்கில் பணம் பெற்றுக் கொள்ளும்போது இவரின் கையெழுத்து முக்கியமாகும். இவ்வமைப்பின் வேலைத் திட்டங்களை செயல்படுத்தும் போது பதவி இலட்சனை பயன்படுத்தப்படும்.

*4. பிரதிச்செயலாளர் -*

செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் செயலாளரின் அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளல்.

*5. உதவிச் செயலாளர் -*

அமைப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தக வேலைகள், பத்திரிகை அறிவிப்புக்கள், விளம்பரங்கள் ஆகியவற்றை பொறுப்பெடுத்து செயல்படுத்துவதுடன், கற்றறிந்தோர் குழுவின் அறிவுறுத்தலின்படி செயற்படுதல் மற்றும் செயலமர்வுகள், உபதேச கலந்துரையாடல்கள், தான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் இவர் மூலமாக நடைபெறும்.

*6. பொருளாளர் -*

அமைப்பின் பணக்கொடுப்பனவு அனைத்தும் இவர் மூலமாக செயல்படுத்தப்படும். சபை அங்கத்தவர்களின் பணம் மற்றும் அன்பளிப்புக்களையும் வங்கியில் இடுதல், வங்கியில் பணம் பெற்றுக்கொள்ளும் போது கையெழுத்து இடுதல், வருடாந்த வருமான செலவுக் கணக்குளைத் தயாரித்தல். அமைப்பின் அனைத்து சொத்துக்களையும் பாதுகாத்தல் என்பன இவரது கடமையாகும்.

*7. குழு உறுப்பினர்கள்-*

மகாசபைக் கூட்டத்தின்போது தேர்ந்தெடுக்கப்படும் ஒன்பது அங்கத்தவர்களும் ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்கும் சமுகமளித்தல் கூட்டத்திற்குத் தேவையான வேலைத் திட்டங்களை தயார்படுத்துதல். இயக்குநர் சபைக் கூட்டத்திற்கும் சமுகமளிப்பதும் தங்களுடைய பிரதேசத்தின் தகவல்கள் அனைத்து அங்கத்தவர்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். எந்நேரத்திலும் அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாகக்குழுவுடன் ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளல்.

*8. கற்றறிந்தோர் சபை -*

கற்றறிந்தோர் சபையானது மகாசபையின் போது தேர்ந்தெடுக்கப்படும். இதில் அனுபவசாலிகளான பண்டிதர்களையும், பட்டதாரிகளையும் விசேட திறமையுள்ள பிக்குமார்களையும் மகாசபையின் விருப்பத்தின்படி தெரிவு செய்தல் வேண்டும். இச்சபையானது எந்நேரமும் தாபனத்தினதும், உறுப்பினர்களினதும் முன்னேற்றத்திற்காக தமது சேவையை அர்ப்பணிக்க வேண்டும் என்பதுடன்

தர்ம, ஒழுங்குவிதி தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கவும், அங்கத்துவத்தை புதுப்பிக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**5**. அங்கத்துவம்.

அங்கத்துவம் .

(i) இலங்கையில் வசிக்கும் பிக்குமார்கள் அனைவருக்கும் அங்கத்துவம் கிடைக்கப்பெறும். அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்து பதிவு செய்தல் வேண்டும்.

(ii) இச்சபையின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு விகாரையிலும் மாதத்திற்கு 100 ரூபாப் படி வருடத்திற்கு 1200 ரூபா அறவிடப்படும். இப்பணம் முழுமையாக அல்லது மாதாந்த கட்டணமாக பொருளாளரிடம் சேர்க்கப்படும். இப்பணத்திற்கான பற்றுச்சீட்டும் கொடுக்கப்படும்.

(iii) ஒழுக்கநெறியும், தயவான குணமும் கொண்ட புத்த தர்ம சம்பிரதாயங்களையும், விதிமுறைகளையும் உரிய முறையில் பின்பற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் இத்தாபனத்தின் பெறுமதிவாய்ந்த பௌதிகச் சொத்துக்களாகக் கருதப்படுவர். இச்சபையின் எல்லா அங்கத்தவரும் ஒழுங்கான முறையில் தவறாது சபைக்கு சமுகமளிப்பது அவசியமாவதுடன் வினைத்திறனுடனும் செயற்படல் வேண்டும்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பாராதீனப்படுத்தல், பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர் மூலமோ செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும், நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்குதலும், நிருவகித்தலும், ஏதேனும் வங்கியில் நடைமுறை அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பருவ இதழ்களையும் ஏனைய நூல்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடச் செய்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக் கடைகள், அச்சகங்கள் என்பனவற்றைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும், கடன் பெறுதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவி நீக்குதலும், அவர்களின் சேவைக் காலத்தையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசிய மானவாறானவையும் அதன் இடைநேர்விளைவான வையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்குமாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்பினரும் செலுத்தவேண்டிய கட்டணங்கள் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவிவிலகல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(இ) முகாமைச் சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் முகமைச்சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் முகாமைச்சபையின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைச்சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்தப்படுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும், முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதிகளுக்குப் பொறுப்பாக இருத்தலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

உறுப்பினர் பெயர்ப் பதிவேடு.

**8**. இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற ஒவ்வோராளும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக இதன் முன்னர் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஒவ்வோராளும் தமது பெயரையும் முகவரியையும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளின்கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்களையும் பதிந்துகொள்ளவேண்டிய பெயர்ப் பதிவேடொன்றைக் கூட்டுத்தாபனத்தின் முகாமைச்சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும் சீர்திருத்துவதற்காவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் பேணுவதற்காகவும் ஏதேனும் பெறுமானத் தேய்வு அல்லது ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தைக் கூட்டுத்தாபனம் உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, தலைவருடன் செயலாளர் அல்லது பொருளாளார் ஆகிய இருவரில் ஒருவர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

**11**. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும் ;

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும் ;

இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது :

(i) இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருள்படும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்